இயல் 2

# மாமழை போற்றுதும்



## கற்றல் நோக்கங்கள்

- இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகியவற்றின் இன்றியமையாமை உணர்ந்து தம் சமூகப் பங்களிப்பை நல்குதல்
- இயற்கைச் சமநிலை தவறுவதால் விளையும் இழப்பு, சூழல் சீர்கேடு குறித்து அறிந்து விழிப்புணர்வு பெறுதல்
- உரையாடல், பள்ளு, குறும் புதினம் ஆகிய வடிவங்களின்வழி கருத்துகளைப் படித்துப் பொருளுணர்தல்
- மொழியைத் தவறின்றிக் கையாளவும் தமிழ்ச்சொற்களிலிருந்து பிறமொழிச் சொற்களைப் பிரித்தறியவும் திறன் பெறுதல்

## பாடப் பகுதி

இயற்கை வேளாண்மை

ஏதிலிக்குருவிகள் – அழகிய பெரியவன்

திருமலை முருகன் பள்ளு – பெரியவன் கவிராயர்

ஐங்குறுநூறு – பேயனார்

யானை டாக்டர் – ஜெயமோகன்

மெய்ம்மயக்கம்

உரைநடை உலகம்

இயல் 2

# இயற்கை வேளாண்மை

2371MH

**நுழையும்முன்**

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர். இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இவ்வுரையாடல்.

சொக்கலிங்கம் : வா! மங்கை! என்ன ஊரோடு வந்து விட்டாயா? (உட்புறம் பார்த்து) மல்லிகா, இங்கே வா, மங்கை வந்திருக்கிறாள் பார்!

மங்கை : ஆமாம் சித்தப்பா, இங்கே வந்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டன! சுத்தமான காற்று, கிணற்றுத் தண்ணீர், அம்மா கைச்சமையல் வேறெங்கே கிடைக்கும்?

மல்லிகா : வாம்மா மங்கை! குழந்தைகள் நல்லாருக்காங்களா? உன் கணவர் எப்படி இருக்கிறார்?

மங்கை : எல்லோரும் நல்லா இருக்காங்க. நீங்க நல்லா இருக்கீங்களா?

மல்லிகா : நல்லா இருக்கோம்மா.

மங்கை : நான் இனிமேல் நம்ம கிராமத்தில்தான் இருக்கப் போகிறேன். அப்பாவின் நிலத்தில், நம்மாழ்வார் ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்யலாம்னு இருக்கேன்.

மல்லிகா: நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறாய் மங்கை! நமக்கெல்லாம் அவர்தானே வழிகாட்டி.

சொக்கலிங்கம்: சொல்லம்மா, நான் என்ன உதவி செய்யணும்?

மங்கை : இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்ற ஆசை மட்டும் எனக்கு இருக்கிறது! ஆனா, அதைப்பற்றி ஒண்ணும் தெரியாது. நீங்கதான் படிப்படியாக எனக்குச் சொல்லித்தர வேண்டும்.

சொக்கலிங்கம்: சொல்றேன்மா. வா, நம்ம பண்ணைக்குப் போய் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபடி பேசுவோம்....

(மல்லிகா இரண்டு குவளைகளில் மோருடன் வருகிறார். இருவரும் மோர் குடிக்கின்றனர்)

மங்கை : இப்படி வெண்ணெயோடும் வாசனையோடும் மோர் குடித்து எத்தனை நாளாச்சு? எங்க வாங்குறீங்க?

மல்லிகா: மோரை வாங்குவாங்களா? கொல்லையில இருக்குற நம்ம மாட்டோட பால்தான் இவ்வளவு வாசம்.

மங்கை : அப்படியா? எனக்குப் பால், மோர் எல்லாம் நெகிழிப் பையில் வாங்குற பழக்கம். அதான் கேட்டேன்.

(உள்ளிருந்து சொக்கலிங்கம் கிளம்பி வருகிறார். அவருடன் மங்கையும் மல்லிகாவும் கிளம்புகிறார்கள்)

மங்கை : இது என்ன சித்தப்பா, பனைமரம் வளக்கிறீங்களா?



சொக்கலிங்கம்: ஆமாம்மா, பனைமரம் நம்ம தமிழ்நாட்டோட மாநில மரம். பனங்கொட்டய மூன்றடிக்கு மூன்றடி இடைவெளி விட்டு நட்டு வச்சிருக்கேன். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் ஆகுது! இன்னும் ஏழு ஆண்டுல பலன் தரும்.

மங்கை: பனைமரத்துனால என்ன பயன்? சித்தப்பா.

சொக்கலிங்கம்: என்னம்மா, இப்படிக் கேட்டுட்ட, பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம்; சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட. ஆழத்தில் நீர்மட்டம் குறையாம நீரைச் சேமிச்சு வைக்கிற தன்மையுடையது. இதனால நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனை வளர, பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை. இன்னும் ஏழு ஆண்டில் காய்க்கத் தொடங்கிடும். நுங்கு, பதநீர் மட்டுமல்ல அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டுன்னு மதிப்புக்கூட்டுப் பொருள்களும் உருவாக்கலாம். நம்முடைய மருதம் பண்ணையைச் சுற்றிலும் மொத்தமாக 50 பனைமரம் வெச்சிருக்கேன். வாம்மா, உள்ளே போவோம்!

மங்கை: சித்தப்பா, நீங்க மதுரையில வேலை பார்த்தப்ப பழைய முறையில்தானே விவசாயம் நடந்திருக்கும். இன்றைக்கு உரம், பூச்சிக்கொல்லி என்று மண்ணே நஞ்சாகிப் போயிருக்கு.

சொக்கலிங்கம்: ஆமா, மங்கை! நிலத்தைச் சரிசெய்வதுதானே முதல் வேலை! அதற்கு முதல்ல அறுவடை முடிந்த பிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி, மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.

மங்கை: வைக்கோலை மடியச் செய்து உழ வேண்டுமா?

மல்லிகா: ஆமாம் மங்கை. இந்த வைக்கோல் மென்மையானதாகவும் லேசானாதாகவும் தெரிகிறது. இந்த வைக்கோலின் உண்மையான மதிப்பை மக்கள் அறிந்துகொண்டால் உலகம் ஒருமுறை குலுங்கும். நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச்செடிகளை வளர்ப்பது, நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது என்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

சொக்கலிங்கம்: பரவாயில்லையே! மல்லிகா. இவ்வளவு தெளிவாக வைக்கோலின் மகத்துவம் பற்றி அறிந்து வைத்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா. இவர் 1978ஆம் ஆண்டு, "ஒற்றை வைக்கோல் புரட்சி"

### தெரியுமா?



பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.

"இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட. நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்"

– மசானபு ஃபுகோகா

என்னும் நூலை எழுதியவர். உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர். வைக்கோலை மடக்கி உழுவதோடு மட்டும் இல்லாமல் பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும். உழும்போது தொழு உரம் இடவேண்டும். ஆனா, ஒரே ஆண்டில் நிலத்தின் நஞ்சு நீங்காது, ரெண்டு மூன்று ஆண்டுகள் ஆகும்.

மங்கை : சித்தப்பா, தொழு உரம் என்றால்?

சொக்கலிங்கம்: தொழு உரம்னா, வேற ஒன்றுமில்லை, மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்கவேண்டும். இது நஞ்சை நிலத்துக்கு! புஞ்சைன்னா, காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். சாம்பல்னா எங்காவது போய், தொழிற்சாலைக் கழிவை எடுத்துவந்து போடக் கூடாது! ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்தவேண்டும்.

(இருவரும் பேசியபடி சரிவான பகுதிக்கு வருகிறார்கள்)

மங்கை : என்ன இது? முன்பு உங்கள் நிலத்தில் இப்படி ஒரு குளம் இல்லையே!

சொக்கலிங்கம்: ஆமாம் மங்கை, இந்த மருதம் பண்ணைக்கு வளமே, இந்தக் குளம்தான். பழைய கிணத்துல தண்ணீர் அதிகம் இறங்கிருச்சும்மா! நான் இங்கு வந்து இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்று நினைத்தபோது, முதல்வேலை நிலத்தில் இருக்குற நச்சுத்தன்மையை நீக்கியது. அடுத்த வேலை, நீர்வளத்தை அதிகப்படுத்தியது.

மங்கை: அப்படின்னா, எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் வந்தது! பழைய குளத்தையே, ஆழமாக்கினீங்களா? புதுசா வெட்டினீங்களா?



நம்மாழ்வார்

சொக்கலிங்கம்: அந்தத் தப்பை நான் செய்யவில்லை! சின்னச்சின்னதா வாய்க்கால் வெட்டினேன். பழைய கிணத்தைச் சுற்றிச் சின்னச்சின்ன மரக்கன்றுகளை நட்டேன். என் நல்ல நேரம், நல்ல மழை பெய்தது. வாய்க்கால் மூலமா வந்த தண்ணீர் இந்தக் குளத்துல தேங்குச்சு! தண்ணீரே இல்லாத பழைய கிணத்திலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது!

மங்கை : இந்த இடத்துல சில்லுன்னு நல்லாக் காற்று வருது. இது மரத்துல மோதி வருகிற காற்றா? நீரில் மோதி வருகிற காற்றா? என்ன சிலிர்ப்பு! வெயிலே தெரியவில்லை!

மல்லிகா : மங்கை, பண்ணையத்துக்கு வெயிலும் ரொம்ப முக்கியம்மா! மழைநீர்ச் சேகரிப்பால நமக்குக் கிணத்துத் தண்ணீர் மட்டம் உயர்ந்திருச்சு!

மங்கை: சித்தப்பா, நம்ம பண்ணையில் என்னவெல்லாம் விளைகின்றன? நிறைய மரங்கள் இருக்கின்றன. இதென்ன, இந்தப் பயிர் புதுசா இருக்கு?

சொக்கலிங்கம்: மங்கை, இது உளுந்து. நெல்லுக்கு ஊடுபயிராகப் போடுவது! இதை அறுவடை செய்தபின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.

மங்கை: சரி! ஆனால்? பூச்சி விழுந்தா நாம பூச்சிக்கொல்லியத்தானே பயன்படுத்த வேண்டும்.

மல்லிகா: அதுதான் மங்கை, நாம கவனிக்க வேண்டியது. பூச்சிக்கொல்லி பயிரில்

இருக்குற பூச்சிய மட்டும் கொல்லல, விளையற பயிர்க்குள்ளயும் ஊடுருவுகிறது. அதச் சாப்பிடுகிற மக்களுக்கு நெறய நோய் வருது! புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை, இன்னும் என்னென்னவோ சொல்றாங்க!

மங்கை : அது சரி! அப்புறம் எப்படிப் பயிரில் விழுகிற பூச்சிய விரட்டுறது? விளைச்சல் குறையாதா?

சொக்கலிங்கம்: ஏன் குறையப் போகுது? இயற்கை வேளாண்மைன்னா, ஒட்டு மொத்தமா விதைக்கிறதுல இருந்து விளைச்சல் முடிகிற வரைக்கும் வேதிக்கலப்பே இருக்கக் கூடாதும்மா!

மங்கை: வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

சொக்கலிங்கம்: நம்ம முன்னோர்கள் எந்த இரசாயனப் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துனாங்க? சொல்லு பார்ப்போம்? வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாத்தையும் நல்லா இடிச்சுக் கோமியத்துல ஊற வச்சு அதைத் தெளிச்சா போதும்மா! பூச்சியெல்லாம் போயிரும்!

மங்கை : உண்மைதானா? சித்தப்பா!

சொக்கலிங்கம் : ஆமா மங்கை! அப்படித்தான் நாங்க செய்யறோம். பூச்சிகள் வருவது படிப்படியாக் குறையுது. அதோட நிலத்துல இருக்குற மண்புழு போன்ற சின்ன உயிர்கள் அழியறது தடுக்கப்படுது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்துனால, மண்ணும் தன்னோட வளத்தை இழக்கிறதில்ல.

மங்கை: பூச்சிக்கொல்லி சரி? உரத்துக்கு என்ன பண்ணுறீங்க!

சொக்கலிங்கம்: ஏராளமான உரங்கள் போட்டால் விளைச்சல் கூடும்னு நினைச்சோம், மொதல்ல விளைச்சல் கூடுற மாதிரி இருந்தது! அப்புறம் நாளாக நாளாக மண்ணு நஞ்சாகி விளைச்சல் குறைந்தது! அதனால் இப்போதெல்லாம் உரத்தையும் இயற்கையாகவே உருவாக்கிக் கொள்கிறோம்.

மங்கை: நாம் பயன்படுத்துற உரம், மருந்து எல்லாமே இயற்கையா நம்மிடம் இருப்பது, சுற்றுச்சூழலைக் காப்பதற்கான வழியல்லவா?

சொக்கலிங்கம்: ஆமாம்மா, நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல்... மண் சத்து வீணாகாமல் நிலமும் நல்லா இருக்கும்.

மங்கை : அப்படின்னா, விடாமல் மாறிமாறிச் சாகுபடி செய்யலாமா சித்தப்பா?

சொக்கலிங்கம்: இல்லை மங்கை! நிலத்தை ஆறப்போடணும், சரியான கால இடைவெளியில் மாறிமாறிப் பயிரிடணும். இதைப் பற்றியெல்லாம் இன்னும் நீ நிறைய தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குச் சுற்றியுள்ள பண்ணைகள் சிலவற்றைப் பார்வையிடலாம். அரசும் வேளாண்மை அலுவலகம் மூலம் நிறைய வழிமுறைகளைச் சொல்கிறது; பயிற்சிகளையும் தருகிறது. அவற்றில் நீ கலந்துகொண்டு நல்ல வழிமுறைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

மங்கை: ஆடிப்பட்டத்துல உழவைத் தொடங்குகிறேன். பேசிக்கிட்டு இருந்ததுலே நேரம் போனதே தெரியல. வாங்க, வீட்டுக்குப் போவோம்.



கற்பவை கற்றபின்...

1. மாடித்தோட்டம் அமைக்கும் முறையை இணையத்தளம் மூலம் அறிந்து வகுப்பில் கலந்துரையாடுக.
2. பள்ளியில் செயல்படும் தேசியப் பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றம் ஆகியவற்றின் வாயிலாக மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதில் உங்கள் செயல்பாடு குறித்து உரை நிகழ்த்துக.

கவிதைப்பேழை

இயல் 2

# ஏதிலிக்குருவிகள்

23FWP5

**நுழையும்முன்**

உயிர்களின் இருப்பை இயற்கைச்சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி மழைத்துளி. மண்ணில் முதல்துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்துகொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

*குருவிகளையும்*
*கூடுகளையும்*
*பார்க்கக் கூடவில்லை*
*முன்பென்றால் ஊரில்*
*அடைமழைக்காலம்*
*ஆற்றில் நீர் புரளும்*
*கரையெல்லாம் நெடுமரங்கள்*
*கரைகின்ற பறவைக் குரல்கள்*
*போகும் வழியெல்லாம்*
*தூக்கணாங்குருவிக் கூடுகள்*
*காற்றிலாடும் புல் வீடுகள்*

*மூங்கில் கிளையமர்ந்து*
*சுழித்தோடும் நீருடன்*
*பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்*
*மண்ணின் மார்பு*
*சுரந்த காலமது*
*வெட்டுண்டன மரங்கள்*
*வான் பொய்த்தது*
*மறுகியது மண்*
*ஏதிலியாய்க் குருவிகள்*
*எங்கோ போயின.*

*– அழகிய பெரியவன்*



**தெரியுமா?** மார்ச் 20 – உலக சிட்டுக்குருவிகள் நாள்

**நூல்வெளி**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர். 'தகப்பன் கொடி' புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும், உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும், மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரது படைப்புகள்.

**கற்பவை கற்றபின்...**

1. நகரங்களின் பெருக்கமும் பறவையினங்களின் அழிவும் – காரணங்களுடன் வகுப்பறையில் விவாதிக்க.
2. உங்களது மழைக்கால அனுபவங்களைக் கவிதையாக வெளிப்படுத்துக.

கவிதைப்பேழை

இயல் 2

# திருமலை முருகன் பள்ளு

23PSQS

**நுழையும்முன்**

உழவர், உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர். வேளாண்மை இலக்கியமான பள்ளு, அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

### வடகரை நாடு

*மலரில் ஆரளி இந்துளம் பாடும்*
*மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்*
*சலச வாவியில் செங்கயல் பாயும்*
*தரளம் ஈன்றவெண் சங்கயல் மேயும்*
*குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்*
*குடங்கை ஏற்பவர் செய்யெனச் செய்யும்*
*புலவர் போற்றும் திருமலைச் சேவகன்*
*புகழ்வட ஆரி நாடெங்கள் நாடே.*

### தென்கரை நாடு

*வளருங் காவில் முகில்தொகை ஏறும்– பொன்*
*மாடம் எங்கும் அகிற்புகை நாறும்*
*குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்*
*கோல்முறை மன்னர் மண்டலங் காக்கும்*
*இளமின் னார்பொன் னரங்கில் நடிக்கும்–முத்(து)*
*ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும்*
*அளியுலாம் கொன்றை சூடுங் குற்றாலத்– தென்*
*ஐயன்தென் ஆரி நாடெங்கள் நாடே.*

*–பெரியவன் கவிராயர்*



### சொல்லும் பொருளும்

வட ஆரிநாடு – திருமலை, தென் ஆரிநாடு – குற்றாலம், ஆரளி– மொய்க்கின்ற வண்டு, இந்துளம்– இந்தளம் எனும் ஒரு வகைப் பண், இடங்கணி–சங்கிலி, உளம்–உள்ளான் என்ற பறவை, சலச வாவி– தாமரைத் தடாகம், தரளம்– முத்து.

கா–சோலை, முகில்தொகை– மேகக் கூட்டம், மஞ்ஞை– மயில், கொண்டல்– கார்கால மேகம், மண்டலம்– உலகம், வாவித் தரங்கம்– குளத்தில் எழும் அலை, அளி உலாம் –வண்டு மொய்க்கின்ற.

## பாடலின் பொருள்

### வடகரை நாடு

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

### தென்கரை நாடு

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.



### தெரிந்து தெளிவோம்

உங்கள் மாவட்டத்திலுள்ள ஆறு, ஏரி, குளங்களின் பெயர்களை அறிவீர்களா? கேட்டறிக.

தமிழகத்தில் முன்னோர்கள் பயிரிட்டு வந்த நெல் வகைகள் தற்பொழுது குறைந்ததற்கான காரணம் அறிவீர்களா?

### இலக்கணக் குறிப்பு

செங்கயல், வெண்சங்கு – பண்புத்தொகைகள்

அகிற்புகை– ஆறாம் வேற்றுமைத்தொகை

மஞ்ஞையும் கொண்டலும்– எண்ணும்மை

கொன்றைசூடு – இரண்டாம் வேற்றுமைத்தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்

ஈன்ற – ஈன் + ற் + அ

ஈன் – பகுதி

ற் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

செங்கயல் – செம்மை + கயல்

ஈறு போதல் – செம் + கயல்
முன்னின்ற மெய் திரிதல் – செங்கயல்

### தெரியுமா?



பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப் பாட்டு எனவும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

### திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள்

- பைங்குழலாள்
- சீதாபோகம்
- ரங்கஞ்சம்பா
- மணல்வாரி
- அதிக்கிராதி
- அரிக்ராவி
- முத்துவெள்ளை
- புழுகுசம்பா
- சொரிகுரம்பை
- புத்தன்வாரி



- சிறைமீட்டான்
- கருங்சூரை
- பூம்பாளை
- குற்றாலன்
- பாற்கடுக்கன்
- கற்பூரப்பாளை
- காடை கழுத்தன்
- மிளகு சம்பா
- பனைமுகத்தன்

## திருமலை முருகன் பள்ளு கூறும்

### மாடு வகைகள்

காரி, தொந்திக்காளை

மால்காளை, மறைகாளை

மயிலைக்காளை, மேழைக்காளை

செம்மறையான், கருமறையான்

### உழவுக் கருவிகள்

கலப்பை, நுகம், பூட்டு,

வள்ளைக்கை, உழக்கோல், கொழு

கயமரம், மண்வெட்டி, வடம்

## சொற்சுவை

கண்காணி: பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.

இதன் பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

## நூல்வெளி

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் 'பண்பை' என்றும் 'பண்பொழில்' என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை. குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டுள்ளது. இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன. இந்நூல் 'பள்ளிசை' என்றும் 'திருமலை அதிபர் பள்ளு' எனவும் வழங்கப்படுகிறது. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் பெரியவன் கவிராயர். இவரின் காலம் 18 ஆம் நூற்றாண்டு.

## கற்பவை கற்றபின்...

உங்கள் பள்ளி வளாகத்தின் இயற்கைச்சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஏற்ற திட்டம் ஒன்றை உருவாக்குக.

# ஐங்குறுநூறு

23YNSF

**நுழையும்முன்**

இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.

## ஆடுகம் விரைந்தே

*காயா கொன்றை நெய்தல் முல்லை*
*போதவிழ் தளவொடு பிடவலர்ந்து கவினிப்*
*பூவணி கொண்டன்றால் புறவே*
*பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே*

*–பேயனார்*

( கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412 )

*சொன்ன காலத்துக்கும் முன்பே வந்தேன்*
*சொல்லாமல் சொல்லும் மலர்களைக் கண்டேன்*
*அகன்ற கடைவிழி உடையவளே*
*காயா கொன்றை நெய்தல் முல்லை*
*செம்முல்லை பிடவமாய்க்*
*கொல்லைப் புறத்தில் கொட்டிக்கிடக்கும்*
*பேரழகுப் பூக்களின் பாடலைக்*
*கொண்டாடி மகிழ்வோம் விரைந்தோடி வா.*

**திணை** – *முல்லை*

**துறை** – *பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.*



### சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் | - மழைக்கால மலர்கள் |
| போது | - மொட்டு |
| அலர்ந்து | - மலர்ந்து |
| கவினி | - அழகுற |

### பாடலின் பொருள்

[பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன். அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்துவிட்டதனை உணர்த்த நினைக்கிறான்.] பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.

### இலக்கணக்குறிப்பு

ஆல் – அசைநிலை

கண்ணி – அண்மை விளிச்சொல்

ஆடுகம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

### பகுபத உறுப்பிலக்கணம்

**அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**


அலர் – பகுதி

த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி


காயா


கொன்றை


நெய்தல்


முல்லை


தளவம்


பிடவம்

#### நூல்வெளி

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை – கபிலர், முல்லைத்திணை – பேயனார், மருதத்திணை – ஓரம்போகியார், நெய்தல் திணை – அம்மூவனார், பாலைத்திணை – ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

பேயனார், சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

#### கற்பவை கற்றபின்...

தமிழ் இலக்கியங்கள் காட்டும் பூக்கள் குறித்த செய்திகளைத் திரட்டி, தகவல் பலகையில் காட்சிப்படுத்துக.

# யானை டாக்டர்

– ஜெயமோகன்


## நுழையும்முன்

காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் 'காட்டின் மூலவர்' என்பர். மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலைப் பெற்றதும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதுமான யானைகள் நமது பண்பாடு, கலைகளின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்குகின்றன. அவற்றுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் பல்வேறு இன்னல்களை இழைக்கிறோம். வானத்து நிலவும் மண்ணுலகத்துக் கடலும்போல் என்றும் அலுக்காத யானைகளின் பேருருக் காட்சியைக் காண அவற்றின் தடத்தைப் பின்தொடர்வோம்.

டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, வனத்துறையின் மிருக டாக்டராக முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் டாப் ஸ்லிப்புக்கு வந்தவர். டாக்டர் கே. என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், காட்டு மிருகங்களுக்கும் பழக்கப்படுத்தப்பட்ட மிருகங்களுக்கும் மருத்துவ உதவி அளிப்பதைப் பணியாகக் கொண்டவர். ஆனால் மெல்ல மெல்ல யானைகளுக்குரிய சிறப்பு மருத்துவராக அறியப்பட்டார்.

தமிழக வனத்துறையில் யானைகளைப் பற்றி நன்கறிந்தவர் என்று ஆன பின்னர் எங்கே யானைக்கு என்ன பிரச்சனை என்றாலும் அவர்தான் செல்ல வேண்டுமென்ற நிலை வந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, ஒரு கட்டத்தில் உலகத்தின் பல நாடுகளில் உள்ள யானைகளுக்கும் அவர்தான் மருத்துவ ஆலோசகர். டாக்டர் கே. யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள்தான் இந்திய வனவியல் துறையின் கையேடாக இன்றும் உள்ளது. கிட்டத்தட்ட அதே குறிப்புகளின் இன்னொரு வடிவமே காசிரங்கா காண்டாமிருகங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்கிறார்கள்.

ஒருமுறை முதுமலையில் ஒரு யானைக்குக் கால் வீங்கி அது காட்டில் அலைவதாகத் தகவல் வந்தபோது டாக்டர் கே. யுடன் நானும் வனத்துறை அதிகாரி என்ற முறையில் சென்றேன். காட்டுக்குள் அந்த யானை இருக்குமிடத்தைக் குறும்பர் ஏற்கெனவே கண்டு வைத்திருந்தார்கள். அவர்களை ஏற்றிக்கொண்டு ஜீப்பில் காட்டுக்குள் நுழைந்தோம். அதுவும் பழங்காலக் குதிரைப்பாதைதான். நெடுந்தூரம் சென்றபின் ஜீப்பை நிறுத்திவிட்டு நானும் டாக்டரும் காட்டுக்குள் சரிவில் இறங்கிச் சென்றோம். துப்பாக்கியுடன் இரு வனக்காவலர்களும் மற்ற பொருள்களுடன் இரு குறும்பர்களும் எங்களுடன் வந்தார்கள். உடலை அறுக்கும் வேய்மூங்கில் இலைகளை அகற்றி டாக்டர் கே. முன்னால் சென்று



கொண்டே இருந்தார். தரையிலுள்ள வேர் முடிச்சுகள் என் கால்களைத் தடுக்கின.

எழுபதை நெருங்கினாலும் டாக்டர் கே. மிகக் கச்சிதமான உடல் கொண்டவர். காடு அவருக்கு மீனுக்குக் கடல்போல. கொஞ்ச நேரத்தில் காட்டில் யானைகளின் நெடி மெலிதாக வர ஆரம்பித்தது. யானைகள் ஏற்கெனவே எங்களைக் கவனித்துவிட்டன என்று தெரிந்தது. மெல்லிய யானை உறுமல் கேட்ட புல்வெளியில் பன்னிரண்டு யானைகள் கூட்டமாக நிற்பதைக் கண்டோம். எங்கள் கண்களை ஓட்டியபோது மேலும் ஆறு யானைகள் மூங்கில் புதர்களுக்குள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் அருகே நான்கு குட்டி யானைகளும் நிற்பது தெரிந்தது.

டாக்டர் கே. தன் கருவிகளை எடுத்துப் பொருத்திக் கொண்டார். சிறிய துப்பாக்கி போன்ற ஒன்று. அதில் மாத்திரையே குண்டாக இருக்கும். யானையைக் கூர்ந்து தொலைநோக்கியால் கவனித்தார். அதன் எடையை அவதானிக்கிறார் என்று தெரிந்தது. எடைக்கு ஏற்பத்தான் அந்த யானைக்கான மயக்க மருந்தின் அளவைத் தீர்மானிக்க முடியும். அவர் முழுமையாகத் தனக்குள் மூழ்கி வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கருவிகளைப் பொருத்திக் கையில் எடுத்துக் கொண்டு, "நீங்க இங்க இருங்க, நான் போய்ப் பார்க்கிறேன்" என்றார். அவரிடம் எதுவும் சொல்ல முடியாதென்று ஏற்கெனவே நான் நன்றாக அறிந்திருந்தேன்.

அந்த யானை, "பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும். மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும்" என்றார். யானைகளுக்குத் தெரியுமா, இந்தக் காயத்துக்குக் காரணம் மனுசங்கதான்னு என்று கேட்டேன். "கண்டிப்பா... ரொம்ப நல்லாத் தெரியும்" என்றார். மனிதனின் கீழ்மைகள் நாள்தோறும் வளர்வதன் சாட்சியாக யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்கு

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

| | |
|---|---|
| 1. கயம் | 12. அரசுவா |
| 2. வேழம் | 13. அல்லியன் |
| 3. களிறு | 14. அனுபமை |
| 4. பிளிறு | 15. ஆனை |
| 5. களபம் | 16. இபம் |
| 6. மாதங்கம் | 17. இரதி |
| 7. கைம்மா | 18. குஞ்சரம் |
| 8. வாரணம் | 19. வல்விலங்கு |
| 9. அஞ்சனாவதி | 20. கரி |
| 10. அத்தி | 21. அஞ்சனம். |
| 11. அத்தினி | |

வரும் வசதியானவர்களும் படித்தவர்களும் குடித்துவிட்டு வெறியுடன் காட்டு மரத்தின்மீது வீசி எறியும் மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை. மற்ற எந்த மிருகத்தை விடவும் யானைகளுக்கு மிக அபாயகரமானவை. யானையின் அடிக்கால், மணல் மூட்டை போன்றது. மரத்தடியில் கிடக்கும் குப்பியின் பாகங்கள் அதன் மகத்தான எடை காரணமாகப் பாதங்களுக்குள் முழுக்கப் புகுந்துவிடும். நடக்க நடக்க உள்ளே செல்லும். அதன் பின்னால் யானையால் நடக்கமுடியாது. காயம் சீழ் வைக்கும். குருதிப் பாதைகளையோ எலும்பையோ அவை தொட்டுவிட்டதென்றால் அதன்பின் யானை உயிருடன் எஞ்சாது.

"ஆனால், உயிர் போற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது. கண் மட்டும் நல்லாச் சுருங்கி இருக்கும். உடம்பு அங்கங்க அதிரும். யானை சம்மதிச்சா அதுக்கு மயக்க மருந்தே கொடுக்காமக்கூட அறுவைச் சிகிச்சை பண்ணலாம். அந்த அளவுக்குப் பொறுமையா ஒத்துக்கிட்டு நிக்கும். என்ன ஒரு படைப்பு. கடவுள் அவரோட நல்ல மனநிலையில் படைச்சிருக்கார்" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் கே. ஓடையைக் கடந்து இறங்கினார்.

யானைகளை நெருங்கியபோது நடுவே நின்ற பெரிய பிடி யானை உரக்கப் பிளிறியது. அதைக் கேட்ட மற்ற யானைகளும் பிளிறின. அவை டாக்டர் கே. யை நோக்கித் திரும்பின. பிடி யானையின் காதுகள் வேகமாக அசைந்தன. தலையை வேகமாகக் குலுக்கியபடி டாக்டரை நோக்கி வந்தது. டாக்டர் கே. அசையாமல் நின்றார். அது மேலும் தலையைக் குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோலப் பிளிறிக்கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையைக் குலுக்கினால் அது எச்சரிக்கிறது, 'தாக்குவேன்' என்றுதான் அர்த்தம். என் இதயத்துடிப்பை என் காதுகளில் கேட்டேன். டாக்டர் கே. அசையாமல் சில நிமிடங்கள் நின்றார். யானையும் அசையாமல் நின்றது. டாக்டர் கே. மேலும் முன்னே சென்றார். இப்போது அந்த யானை நெருங்கி வந்தது. ஆனால் தலையைக் குலுக்கவில்லை. மத்தகத்தை நன்றாகத் தாழ்த்தியது. அதுவும் எச்சரிக்கை அடையாளம்தான். பல மணி நேரம் நீடித்த இக்காட்சியின் முடிவில் அந்தப் பிடி யானை பின்வாங்கியது. அதனைப் பின்பற்றி அனைத்து யானைகளும் மூங்கில் கூட்டங்களுக்குள் சென்றன.

டாக்டர் கே. கையைத் தூக்கி எங்களை வரும்படி சைகை காட்டினார். நானும் பிறரும் ஓடைக்குள் இறங்கினோம். வனக்காவலர்கள் பின்னால் தங்கிவிட நானும் குறும்பர்களும் முன்னால் சென்றோம். பாதிக்கப்பட்ட யானை சட்டென்று சாய்ந்திருந்த மரம் அதிர நிமிர்ந்து எங்களை நோக்கி வந்தது. அதன் பின்னங்கால் வீங்கி மற்ற கால்களைவிட இருமடங்காக இருந்தது. அதைக் கிட்டத்தட்ட இழுத்துத்தான் அது முன் நகர முடிந்தது.

மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளில் யானை, அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்கு ஆகும். வேட்டை விலங்குகளும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவையும் ஆன சிங்கம், புலி முதலியனவும் நெருங்க அஞ்சும் வலிமை கொண்டவை. யானைகள் குடும்பமாக வாழும். இவை அதிக ஞாபக சக்தி கொண்டவை. யானைகளில் மூன்று சிற்றினங்கள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், மற்றும் ஆசிய யானைகள் ஆகும். பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள்வரை உயிர் வாழ்கின்றன.



அது நாலடி முன்னால் வந்ததும் டாக்டர் அதைச் சுட்டார். மாத்திரை அதன் தோளுக்கு மேல் பதமான சதையில் புதைந்ததும் யானை உடல் அதிர்ந்து அப்படியே நின்றது. காதுகளை அசைப்பது நின்றது. அதன் அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. முன் காலைக் கொஞ்சம் வளைத்து ஆடியது. சட்டென்று பக்கவாட்டில் சாய்ந்து சேற்றை அறைந்து புல் மேல் விழுந்தது. துதிக்கையின் நுனியால் எங்களை வாசம் பிடித்தபின் யானை அசைவிழந்தது.

டாக்டர் கே. யானையின் அருகே அமர்ந்து சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினார். நான் அவருக்கு உதவினேன். காடுகளுக்குள் மற்ற யானைகள் எங்களையே கூர்ந்து நோக்கிக்கொண்டு நிற்பதை உணர்ந்தேன். யானையின் காலில் பாதி கண்ணாடிக்குப்பி ஒன்று முழுமையாக உள்ளே ஏறி இருந்தது. அதைச் சுற்றிச் சீழ் கட்டிப் பொருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் கே. அந்தப் பொருக்கை வெட்டிச் சீழ்பட்ட சதையை முழுக்க, சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டியெடுத்தார். ஆழப் பதிந்திருந்த கண்ணாடிக்குப்பியை எடுத்தெறிந்தார். "ஒரு வாரம்கூட ஆகலை, பொழைச்சுது" என்றார்.

தலையணை அளவுக்குப் பஞ்சை எடுத்து அதில் மருந்தை நனைத்து உள்ளே திணித்து இறுக்கி வைத்துப் பெரிய துணியொன்றால் சுற்றிக் கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக் கொண்டது. அதன் காலில் கூடாரத் துணி போன்ற தோலின்மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளைக் குத்தி இறுக்கி அதனுடன் துணியைச் சேர்த்து ஒட்டிக்கட்டி இறுக்கி முடித்தார். அதன் மேல் கீழே கிடந்த கரிய சேற்றை அள்ளி நன்றாகப் பூசி மூடினார். யானையின் காதில் அதைத் திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னலர் கம்மலைக் குத்தி அணிவித்துவிட்டு எழுந்தோம். மறைந்திருந்த யானைகள் ஒவ்வொன்றாகத் தரையில் கிடந்த யானையைச் சூழ்ந்து கொண்டன. துணியைத் துதிக்கையால் தடவிப் பரிசோதனை செய்து பெரிய யானை மெல்லப் பிளிற, மற்ற யானைகளும் அதனைத் தொடர்ந்து பிளிறின. ஒரு குட்டி யானை மட்டும் மஞ்சணத்தி மரத்தடியில் நின்று காதுகளை முன்னால் தள்ளி எங்களையே பார்த்தது.

"துணிக்கட்டை அவுத்திராதுல்ல?" என்றேன். "அதுக்குத் தெரியும்". "ஆனா யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் பிடிக்காது. சேறு பூசலையன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிக்கிட்டே இருக்கும்" என்றார். "குணமாயிடுமா" என்றேன். "அனேகமா பதினஞ்சு நாளிலே பழையபடி ஆயிடும். யானையோட ரெஸிஸ்டென்ஸ் பயங்கரம். சாதாரண ஆண்டிபயாட்டிக்கூட அபாரமா வேலை செய்யும்" என்றார். மீண்டும் டாப் ஸ்லிப்புக்குக் காரில் திரும்பும்போது டாக்டர் கே., "என்ன ஒரு அற்புதமான படைப்பு. என்னிக்காவது தமிழ்நாட்டிலே யானை இல்லாமப் போனா அப்புறம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்?" என்றார்.

காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு.

– கலித்தொகை 2: 26 –27



அடுத்த முறை அவரை யானை முகாமில் சந்தித்தேன். அவர் வந்ததும் நாற்பத்தெட்டுத் துதிக்கைகள் தலைக்குமேல் எழுந்து அவரை வரவேற்றன. அவர் அவற்றுடன் கொஞ்சியபடி குலவியபடி வேலைகளில் மூழ்கினார். ஒவ்வொரு யானையாகப் பார்த்துப் பரிசோதனை செய்து அறிக்கைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். நடுவே ஷெல்லி, கொஞ்சம் கம்பன், கொஞ்சம் பரணர் பற்றிப் பேசினார். வனத்துறை அதிகாரி என்பதை மறந்த நான் மெல்ல மெல்ல அவரின் உதவியாளராகவும் ரசிகராகவும் மாணவராகவும் மாறிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அவர் வீட்டுக்குச் சென்றதுமே அவர் எழுதி வைத்திருந்த பெரிய ஆய்வேட்டை எடுத்து நீட்டினார். "படிச்சுப் பாரு" என்றார். அவருடன் பேசிக்கொண்டே இருந்ததில் இருட்டிவிட்டது. "கௌம்பறியா.. வேணுமானா இங்கேயே தங்கிக்கோ" என்றார். அசதியாக இருந்ததால் நான் படுத்துக்கொண்டே படித்தேன். டாக்டர் இரவு உணவை அரைமணி நேரத்தில் சமைத்தார். இருவரும் அமைதியாகச் சாப்பிட்டோம். கோயில் யானைகளைக் காட்டுக்குள் கொண்டு வந்து பராமரித்துத் திருப்பி அனுப்புவதற்குண்டான செயல் திட்டத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். இரவு பத்து மணிக்குக் களைப்பு காரணமாக நான் படுத்துத் தூங்கிவிட்டேன்.

மீண்டும் விழித்தபோது அறையில் வெளிச்சம் இருந்தது. டாக்டர் கம்பளிச்சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தார். "வெளியே ஏதோ சத்தம் கேக்குது... யானை வாசமும் அடிக்குது" என்றார். "யானைக்கூட்டம் வந்திருக்குமோ" என்றேன். "வழக்கமா இந்தப் பக்கம் வராது. ஏதோ காரணம் இருக்கணும்" என்று டார்ச்சை எடுத்துக் கொண்டார். நானும் கிளம்பினேன். ஆனால் அதற்குள்ளாகவே டாக்டர் கே. யானையைப் பார்த்துவிட்டிருந்தார். "குட்டி.. இரண்டு வயசுக்குள்ள இருக்கும்" என்று அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் சில கணங்களுக்குப் பின் நானும் அந்த யானைக்குட்டியைக் கண்டேன். "இந்த வயசிலே தனியா வராதே" என்றார் டாக்டர். "வா, பாப்போம்". இருட்டில் வெளிச்சத்தை அடித்தால் அதன் பின்சூழலைப் பார்க்க முடியாது என்பதால் இருட்டுக்குள்ளேயே சென்றோம்.

யானைக்குட்டி மெல்லப் பிளிறியபடி துதிக்கையைத் தூக்கி மோப்பம் பிடித்தது. "ஈஸி ஈஸி" என்றார் டாக்டர். யானைக்குட்டி மெல்ல முன்னால் வந்தது. அது நொண்டுவதுபோல் இருந்தது. "காயம் பட்டிருக்கு" என்றேன். யானைக்குட்டி மீண்டும் நின்று ஜெர்ஸி பசு கத்தும் ஒலியில் பிளிறியது. மீண்டும் தள்ளாடியபடி முன் நகர்ந்தது. டாக்டர் என்னிடம், "நில்லு" என்று சொல்லிவிட்டு அருகே சென்றார். அது துதிக்கையை ஊசல்போல் வீசித் தலையை வேகமாக ஆட்டி அவரை வரவேற்றது. அவர் அந்தக் குட்டியானையைத் தட்டித்தட்டி அமைதியாக்கினார். "இவனைப் படுக்க வைக்கணும். இப்பச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. போய் என்னோட கிட்டை எடுத்துட்டு வா" என்றார். நான் அறைக்குள் ஓடிச்சென்று அவரது பெரிய மருத்துவப் பெட்டியைக் கொண்டு வந்தேன்.

டாக்டர் கே. அதன் வாயில் ஊசி போட்டார். துதிக்கையை முன்னங்கால்களுக்கு நடுவிலிருந்து முன் பக்கம் வரை ஊஞ்சல்போல ஆட்டி முன்னும் பின்னும் உடலை அலைத்தது. ஆட்டம் தளர்ந்து மெல்லப் பக்கவாட்டில் சரிந்து உட்கார்ந்து விழுந்து கால்களை நீட்டிப் படுத்தது. "விளக்கு" என்றார். நான் காட்டினேன். மறுபடியும் மதுக்குப்பி. இம்முறை அதன் கீழ் நுனிக் கால்களுக்கு வெளியே நீட்டித் தெரிந்தது. யானை அதிக எடையில்லாததனாலும் அதிக நாட்கள் ஆகாமல் இருந்ததனாலும் அது உள்ளே செல்லவில்லை. டாக்டர் அதைப் பிடித்து இழுத்து உருவினார். குருதி அவர் கையை நனைத்தது. கையை உள்ளே விட்டு மதுக்குப்பியின் பாகம் ஏதும் இல்லையென்பதை உறுதி செய்து, பஞ்சை மருந்தில் நனைத்து உள்ளே செலுத்திக் கட்டினார்.

"ஒரு மணி நேரத்தில எந்திரிச்சுடுவான்... காலையிலே முதுமலைக்குத் திரும்பிப் போயிடுவான்" என்றார் கே. "முதுமலைக்கா?" என்றேன். "ஆமா, அங்கே இருந்துதானே வந்திருக்கான். நீயும் இவனைப் பாத்திருக்கே. ஒண்ணரை வருசம் முன்னாடி நாம முதுமலையிலே ஒரு யானைக்கு இதேமாதிரி மதுக்குப்பி எடுத்தோமே, அப்போ அந்தப் பெரிய மஞ்சணத்தி மரத்தடியில நின்னது இவந்தான். அப்ப ரொம்பச் சின்னக்குட்டி" என்றார். "எப்படித் தெரியும்?" என்றேன். "ஏன், அங்க பார்த்த ஒரு மனுசனை

யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான வேணுமேனன் ஏலீஸ் விருதினை 2000ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின்மூலம் செயல்படுத்தியவர்.

உன்னால திரும்பிப் பாத்தா சொல்லிட முடியாதா?" என்றார். பின்னர் டாக்டர் கே. எழுந்து கைகளைப் பஞ்சால் அழுத்தித் துடைத்துக் காகிதப் பைக்குள் போட்டார். "அவ்வளவு தூரம் உங்களைத் தேடியா வந்திருக்கான்.. ஆச்சரியம்!" என்றேன். "பாவம், நல்ல வலியிருந்திருக்கு. யானைகள் அடையாளங்களைக் கண்டுகொண்டு தேடிச் செல்வதைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கேன். முந்நூறு கிலோ மீட்டர் தூரம்கூட யானைகள் தேடிச் செல்வது உண்டு. அவை சிறு தகவலைக்கூட மறப்பதில்லை" என்றார். இருந்தாலும் ஜீப்பில் திரும்பிய எங்களை ஒரு குட்டியானை அத்தனை தூரம் தேடி வந்தது, என்னைப் பிரமிப்பூட்டியது.

நாங்கள் மீண்டும் வீட்டுப் படியை அடைந்ததும் டாக்டர் கே. காட்டை உற்றுப் பார்த்தார். இருளுக்குள் மெல்லிய இருளசைவுகள் உருவாகின. பெரிய யானைக்கூட்டமே அங்கே நிற்பதைக் காண முடிந்தது. நான் விளக்கை அடிக்கப் போனேன். "வேண்டாம்" என்றார் டாக்டர். என்னால் அந்தக் கால் ஊனமான யானையை அதன் மெல்லிய கோணல் கொண்ட நடையை வைத்து அடையாளம் காண முடிந்தது. அவை முன்னால் வந்து அரை வட்டமாகக் காதுகளை அசைத்துக்கொண்டு நின்றன.

"வந்து கூட்டிக்கொண்டு போயிடும், வா" என்று டாக்டர் சொல்லிக்கொண்டே திரும்பியபோது சட்டென்று இருபதுக்கும் மேற்பட்ட யானைப் பிளிறல்கள் ஒன்றாக இணைந்து பேரொலி எழுப்பின. என் உடல் சிலிர்த்துக் கூசிக் கண்கள் பொங்கி நிறைந்து வழிந்தன. நெஞ்சடைக்கக் கை கூப்பியபடி ஒரு சொல் மிச்சமில்லாமல் மனமிழந்து நின்றேன். யானைக்கூட்டம் துதிக்கைகளைத் தூக்கி வீசிச் சேர்ந்து மீண்டும் மீண்டும் பிளிறின. ஆம், தேவ துந்துபிகள் முழங்கின! வான் முரசுகள் இயம்பின! கருமேகம் திரண்ட விண்ணெங்கும் யானை முக வானவர்களின் புன்னகை நிறைந்திருந்தது.


என்னை "வா" என்று சொல்லி உள்ளே சென்றார் யானை டாக்டர்.

**(யானை டாக்டர் குறும் புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்.)**



நூல்வெளி

ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். விஷ்ணுபுரம், கொற்றவை உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து ஊமைச்செந்நாய், மத்தகம் ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார். இந்தக் குறும் புதினம் 'அறம்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.



கற்பவை கற்றபின்...

1. காட்டுவளமும் காட்டுயிர்களும் பாதுகாக்கப்படுதல் – உயிர்ச்சங்கிலி உயிர்ப்புடன் அமைதல் இரண்டு கருத்துகளுக்கும் வலு சேர்க்கும் வகையில் கருத்தாடல் நிகழ்த்துக.
2. நீங்கள் அண்மையில் படித்த சிறுகதை ஒன்றை வகுப்பறையில் கூறுக.

## மெய்ம்மயக்கம்

24HFVQ

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளையும், இறுதியில் வரும் எழுத்துகளையும் அறிந்து கொண்டதைப் போலவே மொழிக்கு இடையில் வரும் எழுத்துகளையும் அறிந்துகொள்ளவேண்டும். இவ்வாறான எழுத்துகள் தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கண்டறியவும் பயன்படுத்தவும் உதவுகின்றன.

சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது மெய்ம்மயக்கம் எனப்படும். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

### உடனிலை மெய்ம்மயக்கம்

சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேரும் உடனிலை மெய்ம்மயக்க எழுத்துகள் ஆகும். இந்த எழுத்துகளின் அருகில் அவற்றுக்குரிய எழுத்து வரிசை மட்டுமே வரும். பிற எழுத்துகள் வாரா. அவ்வாறு வந்தால் அச்சொல் தமிழ்ச்சொல்லாக இருக்காது.

எடுத்துக்காட்டாக, பக்கம் என்ற சொல்லில் (ப+க்+க்+அ+ம்) க் என்னும் மெய்யெழுத்து தொடர்ந்து இருமுறை வந்துள்ளதைப் பாருங்கள். இதுபோலவே ச், த், ப் ஆகிய எழுத்துகளும் வரும்.

| | |
|---|---|
| அச்சம் | எச்சம் |
| மொத்தம் | சாத்தன் |
| அப்பம் | கப்பம் |

### வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் ர், ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும். எனவே, இவ்விரு மெய்யெழுத்துகளும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரியவையாகும்.

| | |
|---|---|
| ர் | – தேர்தல், உயர்வு |
| ழ் | – வாழ்பவன், சூழ்க |

க், ச், த், ப், ர், ழ் ஆகிய ஆறனையும் தவிர்த்தஏனையபன்னிரண்டுமெய்களும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ளன. இவற்றையும் மெய்ம்மயக்கம் என்றே கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| ட் – பட்டம், காட்சி | ம் – அம்மா, அம்பு |
| ற் – வெற்றி, பயிற்சி | ன் – மன்னன், இன்பம் |
| ங் – அங்ஙனம், தங்கம் | ய் – செய்யலாம், வாய்மை |
| ஞ் – விஞ்ஞானம், மஞ்சள் | ல் – நல்லவன், செல்வம் |
| ண் – தண்ணீர், நண்பகல் | வ் – இவ்விதம், தெவ்யாது |
| ந் – செந்நெறி, தந்த | ள் – உள்ளம், கொள்கை |

### ஈரொற்று மெய்ம்மயக்கம்

தனிச்சொற்களிலோ கூட்டுச்சொற்களிலோ சொற்களின் இடையில் ய், ர், ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும். (மூன்று மெய்களாக மயங்கி வரும்) இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.

| | | |
|---|---|---|
| ய் – காய்ச்சல், நாய்க்கால் | ர் – உயர்ச்சி, தேர்க்கால் | ழ் – வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி |

**இனவெழுத்து (நட்பெழுத்து)**

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். சொற்களின் இடையில் மெல்லின எழுத்துகளுக்குப்பின் வல்லின மெய்கள் மட்டுமே வருவதை இனவெழுத்துகள் அல்லது நட்பெழுத்துகள் என்பர்.

| | | |
|---|---|---|
| ங் – க் (அங்கம்) | ஞ் – ச் (பஞ்சம்) | ண் – ட் (பண்டம்) |
| ந் – த் (சந்தம்) | ம் – ப் (கம்பம்) | ன் – ற் (தென்றல்) |

பிழையின்றிப் பேசவும் எழுதவும் ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறிந்து கொள்ளவேண்டும். எங்கெங்கு இவ்வெழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இனவெழுத்துகளால் அறியலாம். ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறியாமல் எழுதுவதால் ஏற்படும் பிழையை மயங்கொலிப் பிழை என்கிறோம்.



கற்பவை கற்றபின்...

பேச்சுவழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுள் உடனிலைமெய்ம்மயக்கத்திற்கும், வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கும் உடன்படாதவற்றைத் தேர்ந்தெடுத்துக் காரணம் கூறுக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. *பத்தியைப் படித்து மயங்கொலிப் பிழைகளைத் திருத்துக.*

   *வேலன் நூலகம் செண்றான். வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நிண்றான். அன்டங்கள் குறித்த புத்தகங்களைக் கன்டான். அந்தப் புத்தகங்களிலிருந்து குறிப்புகளை எடுத்துக் கொன்டு நெஞ்சம் மகிழ்ன்தான்.*

2. *மெய்ம்மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்க்கால் | வாழ்க | வாழ்ந்த | பாக்கம் | சேர்தல் | நார்ச்சத்து |
| எச்சம் | மார்கழி | ஆழ்தல் | மொத்தம் | கப்பல் | தாழ்ச்சி |

3. *தொடர்களில் உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் இடம்பெற்றுள்ள மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறிக.*

   *அ) இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.*

   *ஆ) நேர்மை என்னும் சிறந்த கொள்கையைச் சார்ந்து வாழ்பவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படுவர்.*

   *இ) இயற்கைக் காட்சிகளின் வழியாக எளிய சொற்களைக் கொண்டு, கவிதை எழுதப் பழகவேண்டும்.*

   *ஈ) இந்தியா கணினித் தொழில்நுட்பத் துறையில் வேகமான வளர்ச்சி கண்டு வரலாற்றின் பக்கங்களில் இடம்பெற்று வருகிறது.*

   *உ) வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வு செய்து "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலை ஜப்பான் அறிஞர் எழுதினார்.*

# நம்மை அளப்போம்

24RBXD

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை    ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் – குறும் புதினம்    ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –
   அ) மண்புழு    ஆ) ஊடுபயிர்    இ) இயற்கை உரங்கள்    ஈ) இவை மூன்றும்
3. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது    ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது    ஈ) வானம் என்பது பொய்யானது.
4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்    ஆ) நேரடிப்பொருள்
   (i) அ– மட்டும் சரி    (ii) ஆ – மட்டும் சரி    (iii) இரண்டும் சரி    (iv) அ – தவறு, ஆ - சரி
5. பிழையான தொடரைக் கண்டறிக
   அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
   ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
   இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
   ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

**குறுவினா**

1. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.
2. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
3. வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u> – பொன்
   மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?
4. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
5. ய், வ், ஞ், ட், ற், ந் – மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

**சிறுவினா**

1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தைக் எழுதுக.
2. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
3. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
5. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.

## நெடுவினா

1. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.
2. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.
3. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்



ஆபிரகாம் பண்டிதர்
(1859 – 1930)

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம்கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்'. எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

## வினாக்களுக்கு விடையளிக்க

1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
3. உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.
4. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.
   அ) சங்கீதம் ஆ) வித்தியா இ) மகாஜனம் ஈ) சாகரம்
5. இலக்கணக் குறிப்பும் பகுபத உறுப்பிலக்கணமும் தருக. அ) பயின்றார் ஆ) தொடங்கினர்

## தமிழாக்கம் தருக.

1. *Just living is not enough. One must have sunshine, freedom and a little flower – Hans Anderson*
2. *In nature, light creates the colour. In the picture, colour creates the light – Hans Hofmann*
3. *Look deep into nature and then you will understand everything better – Albert Einstein*
4. *Simplicity is nature's first step, and the last of art – Philip James Bailey*
5. *Roads were made for journeys not destinations – Confucius*

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

1. உலை, உளை, உழை
2. வலி, வளி, வழி
3. கலை, களை, கழை
4. கனை, கணை
5. குரை, குறை
6. பொரி, பொறி

(எ.கா.) உலை, உளை, உழை

மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

## கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க

உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!!

இயற்கை உணவுத் திருவிழா

நாள் : தை 5 முதல் 11 வரை நேரம் : மாலை 6 – 10 மணி இடம் : தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல.....

## நயம் பாராட்டுக

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

– கவிமணி

## மொழியோடு விளையாடு

எண்ணங்களை எழுத்தாக்குக.



**புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

1. ஐந்தெழுத்துக்காரன்
முதலிரண்டோ
பாட்டெழுதுபவரின் பட்டம்
இரண்டும் மூன்றுமோ
பசுப்பால் என்பதன் பின் இறுதி
கடைசி இரண்டெழுத்தோ
மானினத்தில் ஒரு வகையாம்
இரண்டும் ஐந்துமோ
பொருளை விற்கத் தேவையாம்
அது என்ன ?

2. இறுதி இரண்டெழுத்தோ
பழத்தின் முந்தைய பச்சை நிலை
தமிழ்க்கடவுளின் முற்பாதியை
முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்
நடுவிலோ ஓரெழுத்து ஒருமொழி
அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்
சேர்த்தால் காயாவான்
பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்
ஏழெழுத்துக்காரன் அவன் யார்?

**இவைபோன்ற சிறுசிறு புதிர்க் கவிதைகளை எழுதிப் பழகுக.**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு குறித்த முழக்கத்தொடர்கள் எழுதிக் காட்சிப் படுத்துக.**

(எ.கா.) *1. விதைப்பந்து எறிந்திடுவீர்! பூமிப்பந்து காத்திடுவீர்!*
*2. சிட்டுக்குருவிக்குக் கொஞ்சம் அரிசியிடு! உலக உயிர்களுக்கு உன் கருணையிடு!*

## செய்து கற்போம்

வேளாண்மை தொடர்பான சொற்கள் விளக்க அகராதி ஒன்று உருவாக்குக.

## நிற்க அதற்குத் தக

*முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.*

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாதவர் |

### கலைச்சொல் அறிவோம்

இயற்கை வேளாண்மை – Organic Farming
வேதி உரங்கள் – Chemical Fertilizers
ஒட்டு விதை – Shell Seeds
தொழு உரம் – Farmyard Manure
மதிப்புக்கூட்டுப் பொருள் – Value Added Product
வேர்முடிச்சுகள் – Root Nodes
தூக்கணாங்குருவி – Weaver Bird
அறுவடை – Harvesting

அறிவை விரிவு செய்

### அறிவை விரிவு செய்

இயற்கை வேளாண்மை – கோ. நம்மாழ்வார். பனைமரமே பனைமரமே – ஆ. சிவசுப்பிரமணியன்.
யானைகள்–அழியும் பேருயிர் – ச. முகமது அலி, க. யோகானந்த். பறவை உலகம் – சலீம் அலி
Elephants: Majestic Creatures of the Wild – Shoshani. J.

இணையத்தில் காண்க

https://www.elephantvoices.org/

# இணையச் செயல்பாடு

## இயற்கை வேளாண்மை

இயற்கை வேளாண்மை அறிவோம் !





**படிகள்:**

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'இயற்கை வேளாண்மை' என்னும் செயலியைப் பதிவிறக்கி நிறுவிக் கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் சங்க காலத்தில் ஏர்ப் பயன்பாடு, சங்க காலத்தில் எள் விளைச்சல் எப்படி இருந்தது போன்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.
- இடப்பக்கம் மேல்பகுதியில் உள்ள பட்டியலில் இயற்கை வேளாண்மை – செய்திப்பிரிவுகளில் இயற்கை உரம், காணொளி, கீரை வகைகள், சிறுதானியச் சமையல், பழமொழி போன்ற பல தெரிவுகள் மூலம் இயற்கை வாழ்வியல் முறையை அறிக.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**







**செயல்பாட்டிற்கான உரலி**

https://play.google.com/store/apps/details?id=com.Aapp.
– vivasayamintamil&hl=en

B123_11_TAM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே**